DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.15/2024**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.1

Defence

Court

Name : ராஜேஸ்வரி
Father/ Husband Name : மணி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

எதிரி ஆஜர் .

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.01.2025.
**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் முள்ளிக்கூண்டில் குடியிருந்து வருகிறேன். எதிரியை தெரியும். கடந்த 23.11.2023ம் தேதி நான் ஆடு மேய்த்து கொண்டிருந்தேன். அப்போது ரீட்டா மருமகன் ஸ்டிபன் என்பவர் முதல் நாள் என்னிடம் இந்த பக்கம் ஆடு மேய்க்க கூடாது என ரொம்ப அசிங்கமாக பேசினார். நான் என் அண்ணே இப்படி தெரியாதவர் போல பேசுகிறீர்கள் என கேட்டேன். அப்போது எதாவது இப்படி பேசினால் வெட்டி புதைத்துவிடுவேன் என சொன்னார். இப்படி எல்லாம் பேசுனீர்கள் என்றால் போலீசாரிடம் புகார் கொடுத்துவிடுவேன் என சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ஆனால், அதில் உள்ள விவரங்களை நான் சொன்னது போல் ஆறாவயல் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் ஜோசப் அமல்ராஜ் என்பவர் எழுதவில்லை. **(புகார்மனுவில் உள்ள எனது கையெழுத்து அ.த.சா.ஆ.1).**

**அரசுத்தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மேலும் இந்த வழக்கில் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.